# போர்வாள்

ிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B. A. (Hons.)

தனி இதழ் அணு 1½
வெளிநாடு அணு 2

ள் || சென்னை 18—10—47 சனிக்கிழமை || வீச்சு 10


## முட்டுக் கொடுத்தாலும்!




ஜமீன் மசோதா எனும் பீரங்கியின் வேட்டுகள் (81 எம். எல். ஏ.க் சட்ட சபையில் கொடுத்த ஓட்டுகள்) இனாம் கட்டிடத்தைக் கலகலக் செய்து விட்டன. இடிந்து விழும் கட்டிடத்தை முட்டுக் கொடுத்தும், நின்றும், தடுத்தி நிறுத்தியும், வளையும் தூண்களை நேர் பெற யும், வேறு என்னென்னவோ ஜால வித்தைகள் செய்தும் காப் ற எண்ணுகின்றனர் சென்னை காங்கிரஸ் அமைச்சர்கள் — ஓ மந் உட்படத்தான்! என்றாலும் இரண்டொரு நாட்களுக்கே காப்பாற்ற ும் சரியும் கட்டிடத்தை. அதற்குமேல் முடியாது. இனாம் கட்டிடம் த தீரும் — விரைவில், மிக விரைவில்! ஆமாம், அமைச்சர்கள் க் கொடுத்தாலும் சரிந்தே தீரும்.

## நீங்கள் நம்புகிறீர்களா?

எட்டுக் கோடி மக்களைத் தீண்டாதவர்கள் என ஒதுக்கி வைத்திருக்கிறது இந்து மதம் — இது பிரிவினை அல்லவாம்!

தமிழ் நாட்டுக் கோயில்களுக்குள் பிராமணர்கள் செல்லும் அளவிற்குத் தமிழர்கள் செல்லக்கூடாது என "சாஸ்திரங்கள்" திட்டம் இட்டிருக்கின்றன — இதுகூட 'பிரிவினை அல்லவாம்!

இந்த நாட்டு "ஓட்டல்"களில் "பிராமணர்கள் இங்கு" "மற்றவர்கள் அங்கு" என்று வேற்றுமைப் பலகைகள் தொங்குகின்றன — இதுவும் பிரிவினை அல்லவாம்!

எத்தனையோ குளங்களில் இந்தத் துறை மேல் ஜாதிக்கு; இந்தத் துறை கீழ் ஜாதிக்கு என்று பிரித்துள்ளது ஆரியம்!—இதுவும்கூட பிரிவினை அல்லவாம்! **ஆனால், திராவிட இனம் தனி இனம், திராவிட நாடு தனி நாடு; ஆகவே திராவிடர்க்குத் தனி அரசு அமைத்தே தீருவோம்** என்று திராவிடர்கள் முரசறைகிறார்களே அது மட்டும்தான் பிரிவினை உணர்ச்சியாம்! நாட்டைக் கூறு போடுவதாம்! பாரதமாதாவைத் துண்டிப்பதாம்! மகா பாதகமான காரியமாம்!

சிலர் சொல்கிறார்கள் இதுபோல!

நீங்கள் நம்புகிறீர்களா?



# எழுத்தாளர் உலகம்

## விடுதலைப்போர் கற்பனைச் சித்திரம் கம்பரசம்

**[விலை முறையே 1—0—0 ; 1-0-0; 1-8-0. பதிப்பு: திராவிடப் பண்ணை. தெப்பக் குளம், திருச்சி.]**

அறிஞர் அண்ணாதுரையின் பேனா முனை நலிவுற்ற தமிழகத்திற்குத் தரும் "டானிக்" இம் மூன்று வெளியீடுகள்.

"விடுதலைப் போர்" மிக அழகிய எழுத்துச் சித்திரம். இன்பத் திராவிடம் உருவாவதற்கான விடுதலைப் போர் புரிய வீரர்கள் தேவை—சொந்த வாழ்வை, சுகத்தை மறந்து பொது வாழ்க்கைத் தீயில் குதிக்கும் மன உறுதி படைத்த தீரர்கள் தேவை; அந்திவேளை அரசியல் வாதிகளும் சாய்வு நாற்காலி சுகபோகிகளும் தேவையில்லை என்பதை நன்கு விளக்குகிறது இந் நூல்.

"கற்பனைச் சித்திரம்" அண்ணா அவ்வப்போது எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு. இதிற் காணப்படும் கதைகள், வாழ்க்கைச் சிக்கல்களின் உண்மைப் படப் பிடிப்புக்கள். "சமுதாயம் பலரைக் குற்றவாளிகள் என ஒதுக்குகிறது-ஆனால் உண்மைக் குற்றவாளி சமுதாயந்தான்" என்பது இப் புத்தகத்தின் அடிப்படைத் தத்துவம்.

"கம்ப ரசம்" கொஞ்சம் காரமானதுதான். ஆனால் கம்பர் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் கலா ரசிகர்களுக்குத் தரப்படும் "டோஸ்" காரமாக இல்லாவிட்டால் அவர்கள் மயக்கம் தீர்வது தான் எப்படி? தமிழகம் தலை நிமிர்ந்து நடப்பதுதான் எவ்வண்ணம்?

அண்ணாதுரையின் நூல்களை அள்ளி விழுங்கக் காத்திருக்கும் தமிழகத்திற்கு அருமையான வடிவமும் வண்ணமும் படைத்த இம் மூன்று நூல்களைத் தந்துள்ள திராவிடப் பண்ணையினர்க்கு நம் பாராட்டு.

## தமிழ் ஆராய்ச்சி

**[ஆசிரியர்: ந. சி. கந்தையா. பதிப்பு: முத்தமிழ் நிலையம். 75, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை 1. விலை 0-6-0.]**

வரலாற்றுத் துறையில் நீண்டகால அநுபவம் மிக்க தோழர் கந்தையா, தமிழ் வடமொழியின் துணையின்றி இயங்க முடியாது என்றும், வடமொழியால் அது வளமும் தெளிவும் பெற்றது என்றும் பொய்யுரைப்பார் கூற்றுகளை அசைக்கமுடியாத ஆதாரம் எனும் சம்மட்டி கொண்டு தவிடுபொடியாக்குகிறார் இச்சிறு நூலில். வடமொழி தமிழிடமிருந்து "இரவல்" பெற்ற உண்மையும் அம்பலத்திற்கு வருகிறது, இந்நூல் மூலம். தமிழர் அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

## தமிழரிடையே அன்புப் போர்

**[ஆசிரியர்கள்: சி. ஆர். பழனியாண்டி; கே. வி. வீரராகவன். பதிப்பு: நியூ இந்தியா புத்தகசாலை, இராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை தனியரசு. விலை 1-0-0.]**

"தற்காலத் தமிழின் தலை[...] தொண்டர்கள் சிலரை எடு[...] கொண்டு அவர்கள் இன்[...] என்ன செய்யக் கூடும்" [...] பதை எடுத்து விளக்குகிறது [...] புத்தகம், ஒவ்வொருவருக்கும் [...] திறந்த மடல் தீட்டுவதன் மூல[...]

திரு. வி. க., மறைமலை அடி[...] எஸ். எஸ். பாரதியார், சே[...] பிள்ளை, வ. ரா, பி. ஸ்ரீ, க[...] பாரதிதாசன், பெரியார், அண்[...] துரை உள்ளிட்ட 47 பேர் ஆசி[...] களின் அன்புப் போருக்கு இ[...] யாகி உள்ளனர்.

ஆசிரியர்கள் ஒளிவுமறைவி[...] ஒவ்வொருவர் குற்றங்களை[...] எடுத்துக் கூறுவது காண [...] வளவோ மகிழ்ச்சியாய் இ[...] கிறது. கடித இலக்கியம் தமி[...] குப் புதிது என்ற முறையில் [...] கடித நூல் வரவேற்கற்குரி[...] நல்ல முயற்சி—பாராட்டற்[...] யது. என்றாலும்,

தமிழ் நாட்டின் பொதுவுடை[...] என்று ஆசிரியர்களால் அறி[...] செய்யப்படும் இந் நூலின் மு[...] பில் ஒரு கூட்டத்தார்க்கு மட்[...] உரிய "பிள்ளையார் சுழி" கா[...] படுவதும், சாதி வேற்றுமைக்[...] கல்வி யெறிய வந்த புரட்சி [...] பெரியார் நாயக்கர் என்ற செ[...] லால் அழைக்கப்படுவதும், த[...] யற்ற சிலர் பெரு மக்கள் வரி[...] யில் வைத்து எண்ணப்பட்[...] தும் தவறு என்பதை எடுத்[...] காட்டாமல் இருக்க முடியவி[...]

## பெரிய இடத்துப் பெண்

**[ஆசிரியர்: மு. கருணாநி[...] விலை 0-9-0 கிடைக்குமிடம்: நெடுமாறன், தெற்கு வீதி, தி[...] வாரூர்.]**

வேகமாக வளர்ந்து வரும் [...] விட இளம் எழுத்தாளர்க[...] முன்னணி வரிசையைச் சே[...] தவர் தோழர் கருணாநிதி. பெ[...] இடத்துப் பொல்லாப்பு நமக்[...] என்றுதான் யாரும் ஒது[...] போவார்கள். ஆனால் அந்த இ[...] துக் கொடுமைகளைத்தான் [...] வெளிப்படுத்துவேன் என்று [...] யமாக முன்வந்துள்ளார் [...] நூலாசிரியர். பெரிய இடத்[...]

...கண்ணம்மா, "குருபி" ...நாதருக்கு வாழ்க்கைப்பட் .. எனவே கசங்கிய மல ...ள், வபூக்கி விழுந்த வனிதை ...ள்; கொலைகாரியும் ஆனாள். அவள் குற்றமா? அல்ல ...கிறார் கருணாநிதி. அதற்குக் ...ையும் தருகிறார். விறுவிறுப் ... நடை; வசீகரமான கதை.

## ...டாமையும் இந்து மதமும்

[வெளியிடுவோர்: திராவி...ன் பதிப்பகம், வேலூர். (வ. ஆ) விலை 0-4-0.]

...ுச்சி வானொலி நிலையத்தில், ...துரை நெடுஞ்செழியன் ...ரும் தீண்டாமை எனும் ...ள் குறித்துப் பேசிய அரிய ...்பொழிவுகளின் தொகுப்பு ... தமிழர் அனைவரும் படிக்க ...டிய புத்தகம்.

## ...விடன்

[...தமிழ் வார வெளியீடு. தனி ...ழ் 0-1-3. ஆண்டுத் ...ாகை ரூ. 4-8-0. இடம்: ...சுங்குராம செட்டித்தெரு, ...ன்னை.]

...வறியா உழைப்பின் உருவம் ...ர் என். வி. நடராசனின் ...நர்த்தனமே திராவிடன். ...ம் அறியாத எழுத்துக்கள், ...த்தமான கண்டனங்கள், ...கடி போன்ற தலையங்கங்கள், ...களைத் திக்கு முக்காடச் ...யும் "திறந்த மடல்"கள் ...ளவும் கொண்ட திராவிடன் ...வர் கோட்டத்திற்கு ஒரு வெடி ... போர்வாளும் திராவிட ...ஒரே நாளில் பிறந்த இரட் ... சகோதரர்கள். போர் ...மட்டும் இருந்தால் போதுமா? ...க் கைபிளைந்தி பகைப்புலம் ...பதற்குத் திராவிடன் முன் ...வேண்டும் அல்லவா? எனவே ... போலும் போர்வாளும் ...னும் ஒரே நாளில் "உலா" ...தொடங்கின! "போர் வாள்" ...ர்கள் திராவிடனைக் கட்டா ...டிக்கவேண்டும் என்பது நம்

## பூந்தோட்டம்

[ஆசிரியர்: வை. திருநாவுக்கரசு. விலை அணா 4. கிடைக்குமிடம்: பூந்தோட்டம் பணிமனை, சேலம்.]

சிறந்த கட்டுரைகள் நிறைந்த மாத வெளியீடு. செப்டம்பர் இதழில் தில்லை வில்லாளன், எஸ். கருணாநந்தம், குலோத்துங்கன், ஏ. பி. சனார்த்தனம், மு. கருணாநிதி, சொக்கப்பா முதலியோர் எழுதி உள்ளனர். பெரியார் பக்கம் பூந்தோட்டத்தின் சிறப்பியல்பு. பாரதிதாசன் பாடலை ஆங்கிலத்தில் தரும் முயற்சி நன்று. வெளிப்பகட்டிலும் மேனி மினுக்கிலும் மட்டுமே கருத்துச் செலுத்தும் சில இதழ்கள் போலன்றி, "பூந்தோட்டம்" கருத்துத் துறையில் நல்ல கவனஞ் செலுத்துகிறது என்பது காண நம் உள்ளம் களிப்புறுகிறது.

## குரல்

[திங்கள் வெளியீடு விலை 0-5-0. மக்கள் மன்றம், பாலக்கரை, திருச்சி.]

திராவிடத்தைத் தட்டி எழுப்ப வந்த புதுக் 'குரல்' இது. இதன் அக்டோபர் இதழில் அண்ணாதுரை, முருகு சுப்பிரமணியன், முடியரசன், அறிவழகன், குழந்தை ஆகியோரின் எழுத்தோவியங்களும் நாவலர் பாரதியாரின் வானொலிப் பேச்சும் உள்ளன.

## வரப் பெற்றோம்

### திராவிட நாட்டுப் பிரிவினைப் பாடல்கள்

[ஆக்கியோன்: எம். எஸ். இராமசாமி, விலை 0-6-0 கிடைக்குமிடம் சிவ. சண்முக சுந்தரன், புளியம்பட்டி—அருப்புக் கோட்டை.]

### பகுத்தறிவுப் பாமாலை

[ஆசிரியர்: து. ரா. வீரண்ணன். விலை 0-7-0. இரணியன் பதிப்பகம் துறையூர்.]

### திராவிட அரசு

[திராவிடர் நலன் கருதி வெளிவரும் மாத வெளியீடு. விலை 0-4-0. இடம்: திராவிட அரசு நிலையம், சேண்பாக்கம், வேலூர் (வ.ஆ)]

### உணர்ச்சி

[மாதமிரு முறை. தனி இதழ் 0-3-0 ஆண்டுத்தொகை 5-0-0 ஆசிரியர்: நா. நாச்சிமுத்து. துணை ஆசிரியர்: வீ. நாகசுந்தரம். உணர்ச்சி அலுவலகம், ஈரோடு]

### இன ஒலி

[திராவிடப் பாசறைக்கான புதியதோர் வாள். வார வெளியீடு. ஆசிரியர்: ஜி. சீனிவாசன். தனி இதழ் 0-1-0. ஆண்டுக்கு 3-8-0. இடம்: 20, செட்டித் தெரு, காஞ்சிபுரம்.]


வணக்கம்! வாழ்க தமிழ் நிலம்!

"தமிழ் நிலம்"

(கிழமை இதழ்)

எழுத்தாளர்: அன்னல்தங்கோ.

சென்னையிலிருந்து 24-10-47-ல் வெளிவரும்.

உடனே தேவை!

தமிழ்நில மெங்குமுள்ள ஊர்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஓர் இதழுக்கு ஒரு ரூபாயாக முன்பணம் கட்டக்கூடிய முன் பணியாளர்கள் (Agents) உடனே தேவை. தேவையான இதழ்களுக் குரிய முன்பணத்துடன் இன்றே எழுதுக.

பணிமனையாளர், "தமிழ் நிலம்" பணிமனை,

77, நயினியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

# திராவிடம் என்பது தனி இனமல்லவாம்!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந் திருந்தார்கள். இது பழம், பழங்கதை. பின்னர் இங்கு ஆரியர்கள் வந்தார்கள். அவர்களோடு வடமொழி வந்தது. இந்து மதம் வந்தது. சாதிப் பிரிவினைகளும் வந்தன. இரண்டு மக்களும் நாளடைவில் கலந்தார்கள். ஆரியர்கள் வந்து நெடுங்காலத்திற்குப்பிறகு கிரேக்காகள் வந்தார்கள். பிறகு சாகர்கள், குஷாணர்கள், ஹூணர்கள், மங்கோலியர்கள் என்று பல திறப்பட்ட நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள், பல்வேறு காலங்களில் இந் நாட்டில் குடி புகுந்தார்கள். இவ்வாறு வட மேற்குக் கணவாய் வழியாக வந்த மக்களையெல்லாம் இந்நாடு ஏற்றுக்கொண்டது. ஒவ்வொருவரும் தம் தம் முறையில் இந்நாட்டு மக்களின் நாகரிகத்தையும், கலாசாரத்தையும், பழக்க வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும், மாற்றித் திருத்திப் புதுப்பித்தனர். பெருங் கடலில் வந்து சேரும் பேராறுகளெனப் பாய்ந்து கலந்தனர். முகம்மதிய சமயம் பிறப்பெடுத்த பிறகு, குறிப்பாக தைமூருக்குப் பிறகு, அராபியாவிலிருந்தும், துருக்கியிலிருந்தும், இஸ்லாமியர்கள் இந் நாட்டிற்குள் வந்தார்கள். இந்து இஸ்லாம் சமயங்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கடைசியாக மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியர்கள் வியாபார நிமித்தம் வந்தார்கள். அவர்களுள் ஒரு நாட்டவர், நாளடைவில் அரசியல் ஆதிக்கம் பெற்று நம்மை 150 ஆண்டுகளாக அடக்கி ஆண்டு வந்தனர். சென்ற ஆகஸ்டு மாதம் அவர்களுடைய நேரடியான ஆதிக்கம் முற்றுப்பெற்றது.

இவ்வாறு, பல நாட்டு மக்களின் சேர்க்கையால், பலதிறப்பட்ட நாகரீகங்களின் கலப்பினுல் பலவேறு சமயங்களின் மோதலினுல் இன்றைய இந்தியா, இன்றைய தமிழகம் உருவாகியுள்ளது. திராவிடர்கள் இருந்தது சுமார் கி.மு. 3000ல் இன்று நாம் வாழ்வது கி.பி. 20-வது நூற்றுண்டு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகின்றன திராவிடர்கள் வாழ்ந்து. திராவிடர்கள் இருந்த நாட்டிலே எத்தனை புதுப் புனல்கள் பாய்ந்துள்ளன இதற்குள்? இம்மண் இப்புனல்களினுல் வளம்பெற்று செழிப்புற்று சிறந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இவ்வளவு காலத்திற்குப் பிறகு, இத்தனை மக்கள் கலப்பேற்பட்டபிறகு, அன்று இருந்த திராவிடத்தை அளவுகோலாக வைத்துக்கொண்டு இன்றைய மக்களை அளந்து பார்த்துக் கூறுபோடுவது சரியா? இல்லை யென்று கூறுகிறது அறிவு. கூறுபோட முடியாதென்கிறது பகுத்தறிவு.

பண்டைய காலத்தில் இருந்ததை வைத்துக்கொண்டு இன்று இனப்பிரிவினை செய்யமுடியாது. உதாரணம் பார்ப்போம். ஆரியர்கள் முதன் முதலில், ரஷ்யாவிலுள்ள காகஸஸ் பிரதேசத்தில் இருந்தார்கள். அங்கிருந்து மேற்கு நோக்கி ஒரு கிளையும் கிழக்கு நோக்கி ஒரு கிளையும் படர்ந்ததாகக் கூறுகின்றது சரித்திரம். மேற்கே சென்றவர்கள், மேற்கு ஐரோப்பாவரையில் பரவினுர்கள். கிழக்கே வந்தவர்கள், சிந்து-கங்கை சமவெளி வரையில் பரவினுர்கள். இதை ஆதாரமாகக்கொண்டு மேற்கு

ஐரோப்பாவிலிருந்து க
நதிக்கரை வரையிலுள்ள
முழுவதும் ஆரிய நாடு; அ
வாழும் மக்கள் ஆரிய மக்
ஆரிய இனத்தவர் என்று
லாமா? கூற முடியுமா?
ஞல் அறிவுள்ளவர்கள் ந
மாட்டார்களா? இது
றதே பண்டைய திராவி
களை அடிப்படையாகக் கொ
இன்று திராவிட இனம்
முயலுவதும். ஹிட்லர்
ஆதிக்க வெறியர்கள் இத்
தத்துவங்களைப் பரப்பு
வியப்பில்லை. அறிவற்ற
இவ்வாறு பேசுவதில் ஆ
மில்லை. ஆனுல் பகுத்
என்ற உரை கல்லில், ஒவ்
விஷயத்தையும் உரைத்
பார்த்து உட்பொருள் கா
உண்மை ஊழியர்கள் இவ்
கூறினுல்—அழுவதா, சிரி
என்று தெரியவில்லை.

இதே மாதிரியாக மக்கள்
பற்றும் சமயத்தின் அடிப்
பில் அவர்களைப் பிரிக்க
கிடப்பது நகைப்பிற் குரியது
உலகத்திலுள்ள கிறிஸ்
அனைவரும் ஓரினத்தவர்
கூற முடியுமா? அல்லது
லாமியர் யாவரும ஓரின
என்று கூறமுடியுமா?
றிய ஒரு சிலர் அவ்வாறு
லும் பொதுமக்கள் அ
புக்கொள்ள மாட்டா
உலக இஸ்லாமியர்களே!
படுங்கள் என்று ஒருவ
வானேயாகில் எகிப்து மக்
மொராக்கோ மக்களும்,
யர்களும், ஈரானியர்களும்
எதிர்ப்பார்கள். அவனை
பார்கள். காரணம்? இம்
யான கோஷங்கள் மக்
நலன்களுக்காகப் பாடுப
ளால் எழுப்பப் படுவ
பொதுவாக அவை மக்

# வடநாட்டுச் சுரண்டல் வெறுங் கற்பனையாம்!

திரிகளால், தங்களுடைய
ண்மைக் குரலை மறைத்துக்
காள்ளவே எழுப்பப்படுகின்
ன என்பது சரித்திரம் அறிந்த
வர்க்கும் தெளிவாகத் தெரிந்த
ிஷயம்.

ஆகையினால் பண்டை நாகரி
ங்களின் அடிப்படையிலும்
இனங்களை வகுக்க முடியாது.
மயங்களின் அடிப்படையிலும்
இனங்களை வகுக்க முடியாது.

## ஆயின் இனம் என்றால் என்ன?

ஆங்கிலேயர் ஓரினத்தவர்
ன்று வகுக்கின்றோம். ஜர்
ானியரை ஓரினத்தவராகக்
ருதுகின்றோம். ஸ்பெயின் மக்
ள் ஓரினத்தவர். ஆப்கானியர்
ரினத்தவர். சோவியத் குடி
ரசில் ரஷ்யா, ஜார்ஜியா, மங்
கோலியா என்ற பல இனங்கள்
ள்ளன; போலிஷ் மக்கள்
ரினத்தவர்; பின்கள் ஓரினத்த
ர், என்றெல்லாம் நாம் பொது
ாகக் கூறுகின்றோமே, ஏன்?
ன்னென்ன காரணங்களி
ால் இம் மக்களைத் தனித்தனி
இனங்கள் என்று பிரிக்கிறோம்?

இவர்கள் ஒல்வொருவரும்
னித்தனி பிரதேசங்களில்
ழுமி வாழ்கின்றார்கள். ஒவ்
வொருவருக்கும் பொதுவான
தாரு மொழியுள்ளது. ஒவ்
வொரு மக்களின் பொருளாதார
ும் கட்டான அமைப்புக்
காண்டது. ஒவ்வொருவருக்
ும் பொதுவானதொரு கலையும்
ண்பாடும் உள்ளது. ஒவ்வொரு
க்களிடையும், தாங்கள் ஓரினத்
வர் என்ற உணர்ச்சி காலப்
போக்கில் வளர்ந்து வந்துள்ளது.
இந்தக் காரணங்களால் இவர்
ளை தனித் தனி இனங்களா
ப் பிரித்துக் கூறுகிறோம். இத்
கைய குணத்சயங்கள் உள்ள
ஒவ்வொரு மக்களையும் தனித் தனி இனமெனக் கருதுகிறோம்.

மேலே கூறப்பட்ட காரணங்களில் ஏதாவதொன்று குறைந்தாலும் நாம் ஒரு மக்களை ஓரே இனத்தவர் என்று கருத மறுக்கிறோம். உதாரணமாக நார்வே மக்களும், டென்மார்க்கு மக்களும் ஓரே மொழியைப் பேசிய போதிலும், அவர்களிடையே மறற குணதிசயங்கள் இல்லாமையால் அவர்கள் இருவரும் இருவினத்தவர் என்று கூறுகிறோம். இதைப் போலவே ஒரு மொழி பேசும் ஜர்மானியரையும், ஆஸ்திரியரையும் தனித் தனி இனங்களாகக் கொள்கிறோம். நாம் வாழும் இந்திய நாட்டை எடுத்துககொள்வோம். இந்தியப் பொருளாதாரம், கட்டான அமைப்புக் கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக அரசியல் ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராடியதால் இந்திய மக்களிடையே, நாம் அனைவரும் ஒன்று என்ற மனப்பான்மை வளர்ந்துள்ளது. ஆயினும் இந்தியாவை ஓர் இனமென்று கூற முடியுமா? முடியாது.

ஆகையினால் ஒரு மக்களைத் தனியினம் என்று குறிப்பதற்கு அவர்களிடையே கீழ்க்கண்ட குணதிசயங்கள் இருக்க வேண்டும். அவர்களின் பெரும்பான்மையோர் தலைமுறை தலைமுறையாக ஓரே பிரதேசத்தில் வாழ்ந்து வரவேண்டும். அவர்கள் அனைவருக்கும் பொதுவானதொரு மொழி யிருக்கவேண்டும். காலப்போக்கிலே மலர்ந்த பொதுவானதொரு கலைச்செல்வமும், பண்பாடும் காணப்பட வேண்டும். நெருங்கிய தொடர்பின் காரணமாக பொருளாதார கட்டுப்பாடும், அவர்களிடையே தாங்கள் ஓரினம் என்ற உணர்வும் இருக்கவேண்டும். இவை யிருந்தால் அவர்களைத் தனியினமெனலாம்.

இவ்வடிப்படையில் பார்த்தால் தென்னாட்டிலே இருப்பது ஓரினமல்ல நான்கு இனங்கள்- தமிழ், ஆந்திரம், கன்னடம், கேரளம் என்ற நான்கு இனங்கள் என்பது தெரியவருகிறது. இநத உண்மையைத்தான் ஒரு கவி,

தமிழன் என்றோ ரினமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு

என்று பாடி யிருக்கிறார். இந்த உண்மையிலேயே தமிழ்க் கவி பாரதியும், கேரளக்கவி வள்ளத்தோளும், ஆந்திராவிற்குப் புத்துயிரளித்த கவி பந்துலுவும் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். நகரத் தெருக்களிலும் நாட்டுப்புறங்களிலும், தொழிற்சாலையிலும், பண்ணையிலும், டள்ளியிலும், கல்லூரியிலும் எங்கும் இவ்வுண்மையைக் காணலாம்.

தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா

என்று கூறும்போது தமிழன் தலைநிமிர்நது நிற்பதையும் காணலாம்.

## வடநாட்டுச் சுரண்டல்.

நம் நாட்டிலே போதிய பள்ளிகள் இல்லை. காரணம்? வடநாட்டவரா? இலலை. தமிழனை அவனுக்குரிய அரியாசனத்தில் வீற்றிருக்கவில்லை. காரணம் வட நாட்டவரா? இல்லை. நம் நாட்டிலே படிப்பு போதாது. தப்பித்தவறிப் படித்தவர்களுக்கும் வேலையில்லை.

# இனம் வேறும்! சுரண்டும் குழு வேறும்!!

வேலை கிடைத்தாலும் போதிய ஊதியமில்லை. மூலப்பொருள்கள் நிறைந்து வளம்பெற்ற நாட்டிலே போதிய அளவுக்குத் தொழில்களில்லை. நமது விவசாயம் சீரழிந்து கிடக்கிறது. விவசாயி கடன்பட்டு அவதிப்படுகிறான். காவேரியும் வைகையும், பொருனையும், கிருஷ்ணாவும், கோதாவரியும் பாயும் நாட்டிலே போதிய உணவு இல்லை. காரணம்? வட நாட்டவனா? இல்லை இல்லை. ஏகாதிபத்தியம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடி. ஏகாதிபத்தியத்தின் பேராசைக் கொள்கை.

முதலில் நம் நாட்டுக்கு, வியாபார நிமித்தமாக வந்தான் பிரிட்டிஷ் முதலாளி. நாளடைவில் அரசியல் ஆதிக்கம் பெற்றான். அரசியல் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி நம் தொழில்களை நசுக்கினான். நமது மூலப்பொருளைக் கொண்டுபோய் யந்திரங்களில் பண்டங்களாக்கி நம் நாட்டிலேயே கொண்டுவந்து குவித்தான். இவ்வாறு வியாபாரத்திலும், கொள்ளையிலும் சேர்த்த மூலதனத்தைக் கொண்டுவந்து, நம் நாட்டில் ரயில்வேக்களிலும், பாங்குகளிலும், சணல் தொழிற்சாலைகளிலும், தேயிலை ரப்பர் தோட்டங்களிலும் போட்டு, கொள்ளை லாபம் அடித்தான். தனக்குப் பக்கபலமாக, நம்மிடையே மனித அட்டைகளை வளரவிட்டான். நமது கல்வி முறையைத் தகர்த்தெறிந்தான். புதிய கல்வியும் போதிக்க மறுத்தான். புதிய கல்வியைப் போதிக்க ஆரம்பித்தபோதும் குமஸ்தாக்களைத் திரட்டுதற்காகவே ஆரம்பித்தான். நம் நாட்டுமக்களைச் சுரண்டி, நசுக்கி, அடைத்து வைத்திருந்தான். சுதேசிக் கப்பல் ஓட்டத் தொடங்கியவனைச் சிறையிலடைத்து செக்கிழுக்கச் செய்தான். நம் நாட்டுச் சீர் சிறப்புக்களைப் பாடினவனை நாடுகடத்தினான். தொழில் வளர்ச்சி வேண்டுமென்றவனை தடியாலடித்தான். மூலாதாரமான யந்திர உற்பத்தியா—கூடாது. விமான உற்பத்தியா—கூடாது. யுத்தத்திற்குத் தேவையான தளவாட, யந்திர உற்பத்தியா—கூடாது. யுத்த காலத்தில் எந்த முறையில் தொழிலை வளர்க்கமுடியும், என்பது பற்றி அமெரிக்க கிரேடி மிஷன் தயாரித்த அறிக்கையா—குப்பையிலே போடு. நாணய மாற்று விகிதமா—நமக்குச் சாதகமாக இருக்கட்டும். யுத்தம் நடத்தப் பொருளா—பெற்றுக் கொள்வோம். பதிலுக்குப் பயனற்ற கடன் பத்திரங்களைக் கொடுப்போம். அவற்றை டாலர் நாணயத்திற்கு மாற்ற வேண்டுமா—கூடாது. இம்முறையில் நம் நாட்டிலிருந்து சுமார் 3000 கோடி ரூபாய்கள் வலுக்கட்டாயமாகக் கடனாகப் பெற்றுக் கொண்டு பதிலுக்குக் கடன் பத்திரங்களைக் கொடுத்தது ஏகாதிபத்தியம். கடனில் பகுதியைத் தன் விருப்பப்படி கழித்துவிட்டது. இன்னும் மிகுதியுள்ளது, 1600 கோடி ரூபாய்கள்—அதாவது 40 கோடி மக்களின் ஆறு மாத உழைப்பின் பெறுமானம்.

இவ்விதமாகத் தமிழர்களும், ஆந்திரர்களும், ஏன் இந்திய மக்களனைவருமே சுரண்டப்பட்டுவந்தார்கள். "இச் சுரண்டல் அனைவருக்கும் பொதுவானது; இவ் வாதிக்கம் அனைவரையும் பாதிக்கிறது; ஆகையினால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நம் பொது எதிரி[...]
எதிர்த்துப் போரிடவேண்டும்,"
என்று முழங்கி எழுந்தனர் இ[...]
திய மக்கள். எழுந்தது உல[...]
லேயே மிகப் பெரிய தேசி[...]
இயக்கம். இந்த இயக்கத்தி[...]
தமிழர்களும், ஆந்திரர்களு[...]
வங்காளிகளும், மற்றவர்களு[...]
ஒருவரை ஒருவர் முந்திக்கொ[...]
ண்டு பங்கெடுத்துக் கொண்[...]
னர். தேசத் திருப்பணியிலே[...]
அனேக இளைஞர்கள் குண்டு[...]
கிரையாயினர். கணக்கற்ற ம[...]
கள் தடியடிக் குள்ளாயின[...]
சிறையிலடைபெற்று அவ[...]
யுற்றனர். வீர மரபிலே வ[...]
வீர இளஞ்சிங்கங்கள் மலர்[...]
முகத்துடன் ஏகாதிபத்திய[...]
தூக்குமேடை யேறினர். ப[...]
சிங்கங்கள், குமரன்கள் போன்[...]
பலர் தங்கள் உயிரை, குரு[...]
யைக் கொடுத்து தேசிய இய[...]
ப் பயிரை வளர்த்தார்கள்[...]
இது சரித்திரம். இன்று ஏகா[...]
பத்தியத்தின் பிடி தளர்[...]
போய்விட்டது. எனினும ஏகா[...]
பத்தியச் சுரண்டல், முற்றிலு[...]
ஒழியவில்லை. தமிழ் நாட்டி[...]
நூல் உற்பத்தியில் மூன்றில் ஒ[...]
பங்கு பிரிட்டிஷ் முதலாளியி[...]
கையில் இருக்கிறது. கீழ்த்தி[...]
யிலே மிகப் பெரியதாகக் கரு[...]
படும் நெசவாலை இன்னமு[...]
பிரிட்டிஷ் முதலாளி வச[...]
இருக்கிறது.

இந்திய நாடே இவ்வா[...]
வளர்ச்சியுற முடியாமல் இரு[...]
போது, இந்தியன், ஏகாதிபத்[...]
யத்தின் பிசாசுப் பிடியில் தி[...]
றிக்கொண்டிருந்தபோது, ஒ[...]
வரையொருவர் சுரண்டுவ[...]
எங்கே? எவ்வாறு முடியு[...]
வட நாட்டுச் சுரண்டல் என்ப[...]
வெறும் கற்பனை என்றே மு[...]
வாகிறது.

# திராவிடம் அமையின் தமிழர் சுரண்டுவராம்!

திருச்சியிலே தால்மியா நகர் இல்லையா? நாகையிலே டாடா டத்தும் இரும்பாலை—இல்லையா? மலையாளத்தில் டாடாவின் ண்ணெய் ஆலை இல்லையா? டாடா ஏர்லைன் (Airline) இல்லையா? குஜராத்தி லேவாதவிக்காரர்கள் இல்லையா?.... கவல்ராம், செல்லாராம், சுராஜ்ல் போன்ற கடைகள் இல்லையா? இவை வட நாட்டுச் சுரண்டல் அல்லவா? என்ற கேள்வி எழுகிறது. ஆனால், இவற்றை வைத்துக்கொண்டு ‘வடநாட்டுச் சுரண்டல் தத்துவம்’’ ஒன்று வெளியிடுவது சரியா, முடியுமா என்பதே கேள்வி.

முதலாளித்துவங்களுக்குள்ளே போட்டிகள் உள்ளன என்பது அனைவரும் அறிந்த விஷயம். பிரிட்டிஷ் முதலாளித்துவத்தோடு அமெரிக்க முதலாளித்வம் போட்டி போட்டு முந்திக்கொள்ளப் பார்க்கிறது. முந்திக்கொண்டுவிட்டது. அதே போன்று வடநாட்டு முதலாளித்துவம் தென்னாட்டு முதலாளித்துவத்தோடு போட்டி போடுகிறது. முந்திக்கொள்ளப் பார்க்கிறது. தமிழ் நாட்டு முதலாளிகள் ஆந்திர தேசத்திற்குள்ளும், கேரள நாட்டிலும், பர்மாவிலும், மலேயாவிலும் நுழைந்துள்ளதைப் போல குஜராத்தி, வங்காள முதலாளித்வம் தென்னாட்டிற்குள் நுழைந்துள்ளது, நுழைய முயற்சிக்கிறது. எதிர்காலத்தில் மேலும் மேலும் நுழையப் பார்க்கலாம். இவ்விதம் முதலாளித்வம் நுழைந்ததை வைத்துக்கொண்டு அந்த இனமக்களே நம்மைச் சுரண்டுகிறார்கள் என்று கூறுவது தவறன்றி மற்றென்ன? திருவாங்கூர் மக்களை அழகப்பச் செட்டியார் சுரண்டுகிறார் என்ற காரணத்தினால் கேரள மக்களைத் தமிழ் மக்கள் சுரண்டுகிறார்கள் என்று கூறமுடியுமா? மலேயாவைச் சுரண்டி கொள்ளையடிக்கிறார் முத்தையா செட்டியார் என்ற காரணத்தால் மலேயர்களை இந்தியர்கள் சுரண்டுகிறார்கள் என்று கூறமுடியுமா? இனத்தையும் அவ்வின முதலாளித்வத்தையும் ஒன்றெனக் கருதிப் பேசுவது உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில் அந்தந்த இனங்களிலே அந்தந்த இன மக்கள், தங்களையும், பிற இனங்களையும் சுரண்டும் முதலாளித்வத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். முக்யமாக தொழிலாளிகள் இத் திருப்பணியிலே முனைந்திருக்கின்றனர்.

மேலும், மதுரையிலும், கேரளத்திலும் உள்ள பஞ்சாலைத் தொழிலாளியோ, அல்லது தஞ்சையிலுள்ள விவசாயியோ அல்லது திருச்சியில் உள்ள ரயில்வே ஊழியனோ ஏழ்மையில் உழன்று இன்னலுறுவதற்குக் காரணம், வடநாட்டுச் சுரண்டலல்ல! தென்னாட்டுச் சுரண்டலே! இதையறிந்து-கொள்ள விரும்புவோர் எவரும் எளிதில் அறியலாம். காணவிரும்பும் எவரும் எளிதில் காணலாம்.

## தென்னாட்டின் வளர்ச்சி

இனி, தென்னாட்டில் உள்ள நான்கு இனங்களின் நிலைமையைக் கூர்ந்து கவனிப்போம். ஏழ்மையும், வறுமையும், சுரண்டலும், கல்வியின்மையும், தொழில் வளர்ச்சியின்மையும் அனைவருக்கும் பொது வென்று கண்டோம். ஆனால் அனைவருக்கும் பொதுவல்லாதவை சில இருக்கின்றன. அவை முதலாளித்வத்தின் வளர்ச்சியும், மத்தியதர வகுப்பின் வளர்ச்சியுமே. தென்னாட்டில் தமிழர்கள் முதன் முதலில் ஆங்கிலக் கல்வி பயின்றார்கள். ஆங்கிலேயரிடத்தே வேலைகளையும் பெற்றார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியோடு முதன் முதலில் வர்த்தகம் செய்தவனும் தமிழனே. இக்காரணங்களினாலும், இன்னும் சில (ஆனால் இங்கு அவசியமில்லாத) காரணங்களினாலும், தமிழ் நாட்டிலே முதலாளித்வம், மற்ற இடங்களைவிட அதிகமாக வளர்ந்தது. பம்பாய்க்கு அடுத்தபடியாக தமிழகத்திலேயே பஞ்சாலைத்தொழில் வளர்ந்துள்ளது. ஆந்திராவில் பஞ்சாலைகளே கிடையாது. தமிழ் நாட்டில் சிறு அளவில் ரசாயனத் தொழிலும் வளர்ச்சியுற்றிருக்கின்றது. முதலாளித்துவததின் வளர்ச்சிக்கு அறிகுறியாக இந்தியன் பாங்கு, இந்தோ கர்னாடிக் பாங்கு, போன்ற பெரிய பாங்குகள் உள. கேரளத்திலே கேரளத்தவருக்குச் சொந்தமான பெரிய பாங்குகள் எதுவும் இல்லை. பத்திரிகைத் தொழிலை எடுத்துக்கொள்வோம். தமிழ் நாட்டு முதலாளி ஆந்திர நாட்டு முதலாளியை முந்திக்கொண்டு விட்டான். இவனுக்குத் தமிழ் நாட்டில் விருத்தியடைய வசதி இல்லாது போனமையால், அயல் நாடுகளுக்கும், மற்ற இனங்களிடையேயும் சென்றுள்ளான். மலேயா, பர்மா, போன்ற நாடுகளில் அவனுடைய மூலதனம் ரப்பராகவும், தேயிலையாகவும், பஞ்சாலைகளாகவும், எரு உற்பத்தி ஆலைகளையும் திகழ்கிறது. ஆந்திராவில் சர்க்கரை ஆலையாக இருக்கிறது. தமிழ் முதலாளி வட நாட்டுக்குக்கூட போய்

விட்டான். அங்கு பிர்லாவோடும், டால்மியாவோடும் சேர்ந்துகொண்டு பிரிட்டிஷ் முதலாளியைப் பங்காளியாகக் கொண்டு ஹிந்துஸ்தான் போன்ற மோட்டார் உற்பத்திச் சாலைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளான்.

தமிழ் நாட்டு முதலாளிக்கு மின்சார சக்திகூடகிடைக்கிறது. ஆந்திராவிலே இவ்வளவு கிடைப்பதில்லை...... இவ்வாறு உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம் ஆனால் அவசியமில்லை மேற்கூறியதிலிருந்தே தமிழ் நாட்டு முதலாளி, மற்றவர்களைவிட தலை சிறந்து நிற்கிறான் என்பது தெளிவாகிறது.

இந் நிலையில் தென்னாட்டைத் தனியரசாக்கி ஒரே பொருளாதாரத் தொகுப்பாக்கி, நான்கு இனங்களும் சேர்ந்து திட்டமிட்டு வாழவேண்டும் என்பது மற்ற இனங்களைத் தமிழ் நாட்டு முதலாளித்வத்திற்குக் காவு கொடுப்பதாகும். எப்படி இந்திய மத்திய அரசாங்கத்தை முகமூடியாக வைத்துக்கொண்டு, வட நாட்டு முதலாளி நம்மைச் சுரண்ட வந்து விடுவானோ (சுரண்டுவான் என்று நாம் கருதுகிறோமல்லவா?) அவ்வாறே தென்னாட்டு அரசாங்கத்தைப் பயன் படுத்தி, மற்ற இனங்களைச் சுரண்டத் தலைப்படுவான் தமிழ்நாட்டு முதலாளி. அவனால் அவனைவிட வலுவாய்ந்த குஜராத்தி முதலாளியோடு போட்டியிட்டு வெற்றி பெற முடியாது. ஆகையினால் தான் சுரண்ட, தனக்கெனத் தனியிடம் வேண்டும். இந்த நான்கு இனத்தவர்களையும் சேர்த்து ஓரரசு அமைத்துவிட்டால் அதில்தான் தனிக்காட்டு அரசனாக வாழமுடியும் என்று திட்டமிடுகிறான். ஆகையினால் இவ் வழி இவ் இனங்களின் வளர்ச்சிக்கேற்ற வழியல்ல.

மூன்றாவதாக இச் சுயநிர்ணய உரிமை மக்களுக்குப் பயனுள்ளதாக மக்களை நசுக்கி வரும் நிலச் சீமான்களுக்கும், பண மூட்டைகளுக்கும் நாட்டாண்மை கொடுத்ததாக ஆகாமல் இருக்க உடனடியாக இவர்களின் பிடிப்பு—சமூக வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் உள்ள பிடிப்பு தகர்த்தெறியப் படவேண்டும். விவசாயத்திலே புரட்சிவேண்டும். பெருந்தொழில்கள் தேசியமயமாக்கப் படவேண்டும்.

இந்த மேற் கூறிய வழியிலே சென்றால் தமிழனும், ஆந்திரனும், கேரளத்தவனும், கன்னடத்தவனும் யந்திரத்தொழில் வளர்ச்சிக்கு அடிகோலமுடியும். கல்வியைப் பெருக்கத் திட்டமிட முடியும். கலையை வளர்க்கக் கையெடுத்து பணி புரியமுடியும். உணவையும், உடையையும், இருக்கையையும், பெருக்கி இன்புற்று வாழத் தலைப்படமுடியும்.

மேற் கூறியதிலிருந்து, உண்மை, திராவிடக் கழகம் கூறுவதுபோலும் இல்லை. அதை எதிர்க்கும் காங்கிரஸ் நண்பன் கூறுவதுபோலும் இல்லை. இரண்டிற்கும் இடையே உள்ளதென்பது தெளிவாகிறது.

திராவிடக்கழகத் தோழர்கள் இதைச் சிந்தித்துப் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

[திராவிடர் கழக நண்பர் ஒருவர் இதற்குத் தீட்டியுள்ள மறுப்புரை இவ் இதழில் இடம் இன்மையால் அடுத்த இதழில் வெளிவரும்.]

# பாசிசம் அல்லவாம்!

15-10-47ல் சட்ட மன்றத்தில் தோழர் அப்துல் மஜீத் கேட்டார், இன்றுள்ள பாதுகாப்புச் சட்டம் பாசிச ஆட்சி முறைக்கே சொந்தமான திட்டங்களில் ஒன்றல்லவா என்று. அப்படி நான் நினைக்கவில்லை என்று மூன்றே வார்த்தைகளில் மறுமொழி தந்துவிட்டார் டாக்டர் சுப்பராயன். அவர் திறமையே திறமை!

எவரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் காரணம் கூறாது கைதியாக்கலாம் அரசாங்கம், இச் சட்டப்படி—இது பாசிசம் அல்லவாம்.

விசாரணை என்பதே இன்றி எவரையும் காவலில் வைத்திருக்கலாம், ஏன் என்று யாரும் கேட்கக் கூடாது — இது பாசிசம் அல்லவாம்.

எவர் உடைமைகளும் திடீர்ப் பறிமுதலுக்கு ஆளாகலாம், எவர் தொழிலும் காரணம் கூறப்படாது நிறுத்தப்படலாம், எவர் வர்த்தகமும் எந் நேரத்திலும் 144-க்கு ஆளாகலாம். இவ்வளவும் 'மக்கள் அமைதியைக் குலைப்பது' என்னும் ஒரு மேம்போக்கான காரணம் தவிர்த்து வேறு காரணமின்றி நடை பெறலாம் — இது பாசிசம் அல்லவாம்.

தென்னாட்டுக் கம்யூனிஸ்ட்டுகள் அனைவரும் தக்க ஏதுக்களின்றி சென்ற ஆண்டு அடக்கு முறைக்கு ஆளானது, இச் சட்டத்தால்தான். ஆனால் இது பாசிசம் அல்ல என்கிறார் அமைச்சர்.

ரௌலட் சட்டத்தைப் பாசிசம் என்று சொன்னவர்கள்தான்—வெலிங்டன் ஆட்சியைப் பாசிசம் என்று படப்பிடிப்புச் செய்தவர்கள்தான் — லின்லித்கோ தர்பார் பாசிச வெறியாட்டம் என்று மொழிந்தவர்கள்தான் இந்தப் பாதுகாப்புச் சட்டத்தைப் பாசிசம் அல்ல என்கின்றனர்.

இது பாசிசம் அல்ல என்றால் பாசிசம் என்பதன் பொருள் மாறி இருக்க வேண்டும்—ஆமாம், டாக்டர் சுப்பராயன் அகராதியில்!

போர்வாள்

18—10—47 சனிக்கிழமை

# ஒழியட்டும் இனாம்கள்!

ாளேந்தி வீர வாழ்வு நட
வந்த தமிழ் மூவேந்தர், தங்
தாளேந்திக் கிடந்த ஆரியர்
மயக்குரையில் ஏமாந்து
ர்கட்குத் தந்த **தானங்கள்,**
ம்கள்!

வ்வெவர்க்கும் பணியாது,
் திறம் கண்டும் அஞ்சாது,
நாடுகளைச் சார்ந்த எத்த
யா மன்னாதி மன்னர்களின்
தைக்கும் தலை சாய்க்காது,
ஞ்சு நிமிர்ந்து நடந்துவந்த
டைத் தமிழ் அரசர்கள்,
ம் எனும் சுழிப்பட்டுத் தடு
ய ஒரே காரணத்தால், மத
வெனப் பொய்பேசி மக்களை
த்துவந்த எத்தர் கூட்டத்
துக் கொடுத்த **காணிக்கைகள்,**
ம்கள்!

லோத்துங்கனும், பராந்தக
, கங்கை கொண்டானும்,
ரம் வென்றானும், இராச
னும் இராசேந்திரனும் ஒரு
கு ஒருவர் சளைக்காது,
கர் கூட்டத்திற்கு மடமட
அள்ளிக் கொடுத்த **நன்**
**டைகளே,** இனாம்கள்.

ராவிடம் ஏமாந்திருந்த
ளயில் ஆரியம் அதனிடம்
துக்கொண்ட **சதுர்வேதி மங்**
**களே,** இனாம்கள்.

"மன்னா! இந்த உலக வாழ்வு சதமென எண்ணினையோ! இந்தப் போக போக்கியங்கள், இந்த அரச வாழ்வு, இந்த சொத்து சுகங்கள் இறந்த பின்பு உன்னைத் தொடருமோ! என் கருதினாய் நீ? ஏனோ உனக்கு இவ்வுலக வாழ்க்கையில் இவ்வளவு மோகம்? நீ வீரன்தான், வீரம் இந்த உலகில் உனக்கு வெற்றியைத் தருவதும் உண்மைதான்! பல மண்டலாதிபதிகள் உன் தாள் பணிந்து கிடப்பதும் மெய்தான். ஆனால் வானுலகம்! அங்கு நீ அமர வாழ்வு பெற இந்த வீரம் போதாதே! பக்தி வேண்டுமே, பரமனிடம் பற்று வேண்டுமே, அதற்கு நாட்டில் வேத கோஷங்கள் முழங்க வேண்டுமே! உபநிஷத் ஒலிகள் ஓங்கியெழ வேண்டுமே! எனவே அரசே, கொடு எமக்குத் தானம். பெறு பகவத் கடாட்சம்" என்று 'வாயடியும் கையடியும் அடித்தடித்து', ஒரு கூட்டம் பெற்ற **இறையிலிகளே** (இறை இலி — வரி இல்லாதவை — இனாம்கள்) இனாம்கள்!

ஆம்! நம் மூதாதையர், பூசுரர் கூட்டத்தின் பொய்யுரை கேட்டு, உள்ளம் உருகியவராய், பக்திமேலிட்டவராய், தம் செயலின் முழு விளைவு உணராதவராய், அன்றொரு கால் தந்த நிலப்பகுதிகளே இனாம்கள்.

கோயில் பெருச்சாளிகள் உண்டு கொழுப்பதற்கும், அங்கு உலவும் உருத்திராட்சப் பூனைகள் மேனி வாடாதிருப்பதற்கும் மடத்துத் தம்பிரான்களின் உடல் வண்ணம் மெருகேறுதற்கும், சத்திரங்களிலும் சாவடிகளிலும் உழைப்பறியா உருவங்கள் ஓயாது உண்பதற்கும், இந்தச் சமுதாயக் கரையான்களின் புற்றுகள் தூர்ந்து போகாதிருப்பதற்கும் உரிய முக்கியமான முதன்மையான காரணங்கள் இந்த இனாம்களே.

இனாம்கள், இன்றும், பெரிதும், பார்ப்பனீயப் பலிபீடத்தின் அகோரப் பசியைத் தணிக்கும் திருத் தொண்டையே செய்து வருகின்றன. வறட்சியுற்ற ஆரியக் கழனிக்கு நீர் பாய்ச்சும் ஊற்றுகளாய்—சோர்ந்து விழும் வைதீகத்தை எடுத்து நிறுத்தும் தடிக்கம்புகளாய் — இடிந்து நொறுங்கும் வர்ணாஸ்ரமக் கட்டிடத்தைத் தாங்கிப் பிடிக்கும் இருப்புத் தூண்களாய்—சுருங்கிச் சிதையும் பிராமணீயத்திற்குப் புது ஜீவன் தருவனவாய் இருக்கின்றன, இனாம்கள்.

இந்தக் காரணத்தினாலேதான் அவை ஒழிய வேண்டும் என்கிறோம் நாம். இதே காரணத்திற்காகத்தான் அவை நீடூழி வாழ வேண்டுமென்கிறது வைத்தியநாதர்—வரதாச்சாரி—பாஷ்யம் அய்யங்கார் அச்சு.

ஜமீன்கள் முதலாளித்வத்தின் நடனமேடை என்றால், இனாம்கள் புரோகிதத்வத்தின் வளர்ப்புச் சாலை. ஜமீன்கள் பணக்குண்டுகளால் நிரப்பப்பட்ட பாசறை என்றால், இனாம்கள் புராணக் கட்டுகளில் மூழ்கிய தெப்பம். ஜமீன்களில்

பவனி வருவன வெள்ளியும் தங்கமும் வைரமும் வைடூரியமும் என்றால், இனாம்களில் அன்ன நடை நடப்பன தர்ப்பைப் புல்லும் பாகவத இராமாயணமும். அங்கே இருப்பது ஆணவம். இங்கே வாழ்வது சூழ்ச்சி. அங்கே மிளிர்வது ஆதிக்க வெறி. இங்கே விளங்குவது ஏய்த்துப் பிழைத்தல். அங்குள்ள செங்கோல், ரூபா அணா பைசா. இங்குள்ளதன் பெயரோ கிழிந்த பழம் பஞ்சாங்கம். அதனால் விளைவது அக்கிரமம். இதனால் சேர்வது அநீதி. அந்த அக்கிரமம் தொலைவதே ஒழுங்கு என்றால் இந்த அநீதி கொடிகட்டி வாழ்வது மட்டும் நேர்மையோ? ஜமீன்கள் இருப்பது உழவர்தம் உரிமையைப் பறிப்பது போல்வது எனில், இனாம்கள் நடமாடுவது மட்டும் பயிரிடும் பாட்டாளிக்கு ஆநந்த கீதமா? ஜமீன்கள் தொலையவேண்டும்—அட்டியில்லை நமக்கு. ஆனால் ஜமீன்கள் சரியும் முன்னால் இனாம்களும் ஒழிதல் வேண்டும். இனாம்கள் ஒழியத்தான் வேண்டும். ஒழிந்தால் மட்டுமே உழவர்கள் உரிமையோடு உலவ முடியும் ஊரில். தஞ்சாவூரில் திருடுவது குற்றம் என்றால் திருச்சினாப்பள்ளியில் திருடுவதும் குற்றமே. ஜமீன்களில் உழவர்கள் படுவது பெருந்தொல்லை என்றால் இனாம்களில் படுவதும் துன்பமே.

துன்பம் என்றுதான் கூறினர் 81 எம். எல். ஏக்கள். இல்லையென்றனர் 76 பேர். சட்டமன்றத்தில் ஜமீன் ஒழிப்புத் திட்டம் உரையாடப்பட்டபோது, பிரதமர் ஓமாந்தூரார் தர்ம சொத்துக்களான இனாம்களைப் பறிப்பது கூடாது—அதற்கு நான் உடந்தையாயிருக்க மாட்டேன் என்று உருக்கமாகக் கூறினாராம். ஓட்டெடுக்கப்பட்டபோது பத்து அமைச்சர்கள் தர்ம இனாம்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்றனராம். அவர்களுடன் 76 எம். எல். ஏக்களும் "அது சரி" என்று "ததாஸ்து" பாடினராம். ஓமந்தூரார், கோபால ரெட்டி, காளா வெங்கட்ராவ் மூவரும் நடுநிலை வகித்தனராம். "யார் என்ன சொன்னாலும் சரியே, ஓமாந்தூரார் உருக்கமாகப் பேசினாலும் சரியே, வைத்தியநாத அய்யர் ஆகாது-கூடாது என்று ஆர்ப்பரித்தாலும் சரியே, பாஷ்யம் அய்யங்கார் பதை பதைப்புடன் பத்துப் பன்னிரண்டு அறிக்கைகளில் இனாம்கள் வளர்க என்று பாசுரம் பாடினாலும் சரியே, பத்து அமைச்சர்கள் சரிந்து விழும் இனாம்களுக்கு முட்டுக் கொடுத்து அவற்றைத் தாங்கி நின்றாலும் சரியே, வரதாச்சாரிகள் மாற்றுக முடிவை என்று விண்ணதிர, மண்ணதிர, சட்ட மன்றம் உடன் அதிர, முழக்கமிட்டாலும் கூட சரியே, இனாம்கள் ஒழியவே வேண்டும்" என்று 81 பேர்—எம். எல். ஏக்கள்—கொஞ்சம் நெஞ்சுறுதி படைத்தவர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டனர் சென்ற கிழமை. பெரும்பான்மையோர் தீர்ப்பு இனாம் ஒழிக என்பதே. பத்து அமைச்சர்கள் எதிர்த்துங்கூட, முதலமைச்சர் முத்தான மொழிகளில் தகர்க்காதீர் இனாம்களை என்று வேண்டியுங்கூட, ஆரிய ஏடுகளின் ஆர்ப்பாட்ட வேடத்திற்கு அஞ்சாமலுங்கூட இந்த முடிவுக்கு வந்த அந்தத் தீரர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

"பாராட்டுவார்கள் சூனாமானாக்கள்! களித்துக் கூத்தாடுவார்கள் அந்த மதத்துவேஷிகள்!
நமது மதம் ஆசாரம் கலை இ
களைப் பாழ்படுத்த நினை
அவர்கள் தெம்மாங்கு பா
கள் இம் முடிவு கண்டு.
யின் ஓட்டு அந்த ஆச்ச
கெட்டவர்களுக்குத்தான்
வூட்டும். வேறு யாருக்கு
வூட்டும்" என்று கேட்
முன்னாள் அமைச்சர் பா
இம் முடிவு தெரிந்ததும்.

ஏன் கேட்கமாட்டார்?
பல நூற்றாண்டுகளாக,
முன்னோர்கள் தந்த இ
நிலங்கள் விளைத்துத் தந்த
வுண்டு உரம்பெற்ற கூட்ட
பிரதிநிதி அல்லவோ
ஏன் கேட்க மாட்டார்?

உழைக்காமல், அலுக்கா
உடலில் ஒரு சொட்டு வி
யும் அரும்பாமல், மேனி
யாமல், வாடாமல், "ஒரு
கூட்டம்" வாழ வழி வகு
இனாம்கள் தொலைவதே
அந்தக் கூட்டத்தின் முன்
வீரர் அவ்வண்ணம் ஏன் கே
மாட்டார்?

இனிய தமிழ்நாட்டின்
வயற்காடுகளை பரம்பரை
பரையாக "ருசி" பார்த்த
கள் மீண்டும் மீண்டும் உ
தாவுவதில் வியப்பேதும்
லையே! பின் அவர் அ
ஏன் கேட்கமாட்டார்?

தமிழ்க் குடியில்
அமைச்சர்களே இனாம்
எனும்போது, தமிழ் நா
பிறந்த சட்டமன்ற
பினரே அது வளர்க
போது, ஆரிய ஆதிக்க
ஆணழகர் இறுமைத் தோ
னேன் என்று ஏன் கேட்க
டார்?

அவர் கேட்டதில்கூட
வியப்பில்லை. பெரும்பா
யோர் ஓட்டு இனாம்க
வேட்டு என்று தெரிந்த
ரும், அதை எப்படியே
சரிக்கட்டி இனாம்களை

வதற்காக டில்லி செல்கி
ளே அமைச்சர்கள், அந்தப்
தான் மிக வியப்பிற்குரி

ல்லி செல்கிறார்கள்!
ன சட்டமன்ற காங்கிர
பிளவு—அது குறைக்க
செல்கிறார்கள்! தர்ம
ங்கள் வேண்டும் என்கி
அமைச்சர் குழு; வேண்
—அவை தொலைக என்கி
சட்டசபை காங்கிரஸ், இந்
தர்ம சங்கடத்தைத் தீர்த்
கட்டுங்கள் என்று அங்
ள நீதி தேவர்களிடம்
டுக்கொள்ள சென்னை
மச்சர்கள் டில்லி செல்கி
கள்!

லிடத்து முடிவு, இனும்
ரு வாழ் மரை மட்டல்
துத் தருவதாயிருக்கலாம்;
ங்களே' என்றும் சிரஞ்சீவி
இருப்பீராக!'' என்று
ருவதாய் இருக்கலாம்;
ங்களை மட்டுமல்ல ஜமீன்
கூட ஒழித்தல் ஆகாது
று சொல்வதாயும் இருக்க
மேலிடத்து முடிவு
மாக ஜமீன் ஒழிப்புத்
-மேகூட கைவிடப்பட

இனும்—ஜமீன் இரண்டும்
க! என்று மேலிடம் நல்ல
பு அளித்துவிட்டது; இனி
செயலால் ஆவது யாதொன்
இல்லை பராபரமே'' என்று
—சபை காங்கிரஸ் பராபரக்
ணி வாசித்தாலும் வாசிக்க
. டில்லியே சொல்லி
ட பிறகு இனி நாங்கள்
ன செய்வது என்று
ல்லி பெட்டிப் பாம்பென
ங்கி விடலாம், இன்று
ங்களை ஒழிக்க முந்திய 81
எல். ஏ. க்கள். எதுவும்
கலாம் இன்றைய டில்லி
ாரில். நடைபெறு தென்று
தான் உறுதிகூற முடியும்?

உணவுப் பிரச்னையானாலும், உடைப் பிரச்னையானாலும், பஞ்சாபிகளைப் பற்றிய சேதியாய் இருந்தாலும், பஞ்சாலைகளைப் பற்றிய சேதியாய் இருந்தாலும், சிக்கல் ஜமீன் சார்பானதாயினும் இனாம் சார்பானது ஆயினும், விவாதத்திற்குரிய திட்டம் கதரானாலும் கருப்பட்டியானாலும் டில்லி முத்திரை சென்னைச் சரக்கு ஒவ்வொன்றின்மீதும் இடப்படுவது இன்றைய நடைமுறையாய் விட்டது. டில்லி முத்திரை எதன்மீது விழும், எப்படி விழும், எப்போது விழும், எதற்காக விழும் என்பது நமக்குத் தெரிவதில்லை. முத்திரை விழுந்த பிறகு அதை உடைத்தெறியும் துணிபு தென்னாட்டுக் காங்கிரசுக்கு எழுவதில்லை. இரண்டாண்டுகட்கு முன்பு பிரகாசம் — காமராஜ் கூட்டு முன்னணி ஏற்பட்ட போது, அந்த முன்னணி சென்னைச் சிக்கலில் காங்கிரஸ் தலைமைக் குழுவின் குறுக்கீடு கூடாது என்று முழங்கிய போது, சுதந்தர உணர்ச்சி தேசியவட்டாரத்திலும் எழுந்து விட்டது என்றெண்ணினோம். பிறகோ ஏமாந்தோம். வடநாட்டுத் தலையீட்டை எதிர்த்து எழுப்பப்பட்ட உரிமைமுழக்கம் அல்ல அது, வெறும் அரசியல் சூதாட்டம் என்பதைப் பின்னை வந்த நிகழ்ச்சிகள் கண்டு அறிந்தோம். ஹிந்துஸ்தான் சிறைவாசம் அவர்களுக்குப் பூந்தோட்டத்தில் வீசும் மந்தமாருதமாயிருக்கிறது என்பதையும் தெளிந்தோம். எனவே நெஞ்சம் கலங்கினோம். என்று தணியும் இந்த அடிமையில் மோகம் என்று கண்ணீர் விட்டோம். வடநாடு தாக்கீது பிறப்பிப்பதும், அதற்குத் தென்னாடு தலை கவிழ்வதும் இனியுமா நடப்பது—காமராஜர் சம்பவம் அரசியல் ஏட்டில் இரத்தக் கண்ணீரால் எழுதப்பட்ட பிறகுமா நடப்பது என்று ஏங்கினோம். அந்த நம் ஏக்கத்தை வளர்க்கிறது இன்று மீண்டும் சென்னையர் டில்லி சென்றுள்ள பரிதாபக் காட்சி.

இறுதியாக நாம் சொல்வது இதுதான்: **ஜமீன்கள் ஒழிய வேண்டும். அவை தொலையுமுன் இனும்கள் மடியவேண்டும். அவை மறையுமுன் வடநாட்டுக் காங்கிரசிடம் தென்னாட்டுக் காங்கிரஸ் மண்டியிடும் மானங்கெட்ட போக்கு மாயவேண்டும்.**

நாம் கூறுகிறோம், திராவிடர் கழகம் கூறுகிறது, கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது, சோஷலிஸ்ட் அமைப்பு கூறுகிறது, உழவர் பட்டாளம் கூறுகிறது, மக்கள் மன்றம் கூறுகிறது, குள்ள நெஞ்சுடையார் சிலர் தவிர்த்த எல்லோரும் கூறுகின்றனர்; அதோ கேட்கிறது திராவிடத்தின் குரல்:—

**"ஒழியட்டும் இனும்கள்!"**

## இலட்சியத்துக்கு விலை.

திராவிட மாணவர்கள் இத் திங்கள் முதலில் அண்ணாமலை நகரில் தாக்குண்ட சேதிகேட்டதும் வருந்தினோமில்லை, உள்ளம் பூரித்தோம். திராவிடர் கொடிக்கு ஊறு நிகழ்ந்தது—மாணவர் அறுவர் பெருத்த காயமுற்றனர்—அறுபது தோழர்கள் தழும்பு பெற்றனர் தம் உடலில்—ஐம்பது பேர் போலீஸ் நிலையத்தில்—தூங்கிக் கொண்டிருந்த காளைகளையும் இழுத்துப் பறித்து அடித்து மிரட்டினர் சில பத்தாம் பசலிகள் — அதிகாரிகளோ வாய் மூடி மௌனிகளாயினர்-பல்கலைக் கழகமோ தேள் கொட்டிய திருடனென நின்றது—துணை வேந்தரோ தக்க நடவடிக்கை எடுத்தனரில்லை என்றெல்லாம் வேதனை அலைகள் அடுக்கடுக்காக நம் செவியை அண்டியபோது, ஜெயமுண்டு பயமில்லை மனமே என்று தேமிசைத்

தோம்; 'என் செய்வோம் இறைவா கச்சி ஏகம்பனே' என்று பரிதாபச் சிந்து பாடினோமில்லை. நடந்த நிகழ்ச்சிகள் உள்ளத்தைப் புண்படுத்தும் தன்மையினவே என்றாலும் நம் நெஞ்சு களித்துக் குதித்துக் கூத்தாடிற்றே தவிர, சேதி கேட்டுச் சோகமும் சோர்வும் உற்றுச் சோபிதமற்று வாடிற்றில்லை. அநீதியின் விளக்கம் கிடைக்கக் கிடைக்க நம் மகிழ்ச்சி பெருகிற்று; குறையவில்லை; துக்கபுரிப் பயணம் நாம் தொடங்கவில்லை; ஆத்திர அகவல் வாசிக்கவுமில்லை; வாட்டமோ வருத்தமோ துளியும் நம்மைத் தாக்கவில்லை.

உண்மைதான்! திராவிட மாணவர் உடலம் தாக்கப்பட்டது மெய்தான்! அவர்கள் தம் பச்சை ரத்தம் பரிமாறியதும் அன்று நடந்ததுதான்! ஆத்திரங் கொண்டதோர் ஆணவக் கூட்டம் கொடுமை பல செய்ததும் நாம் கேள்விப்பட்டதுதான்! என்றாலும் நாம் வருந்தவில்லை. ஏன் வருந்தவேண்டும்?

பிறர் நினைக்கவே நடுங்குவர், அவ்வளவு தீவிர வாதம் நம்முடையது. புத்தரும் மாவீரரும் சித்தரும் இராமலிங்கரும் தோற்ற களத்திலே நாம் நிற்கிறோம், பகுத்தறிவுப் பட்டாளம் திரட்டுகிறோம் நாம். ஆயிரமாயிரம் ஆபத்துகளைக் கூவி அழைக்கும் இலட்சியங்கள் நம் உடைமை. கல்லும் முள்ளும் நிறைந்த பாதை—திடீர்ப் பள்ளங்கள் செறிந்த பாதை நம் பாதை. என்றும், எத் திக்கிலிருந்தும், எக் கணமும், எந்த உருவிலும், நம் நண்பா கூட்டத்திலிருந்தும், நம் அண்ணன் தம்பியர் கரத்திலிருந்தும், நம் அன்னையின் சொல்லிலிருந்தும், அன்புள்ள தந்தையின் குரலிலிருந்துங்கூட ஆபத்து நமை நோக்கி எழும் நிலை உண்டு நமக்கு. நாற்புறமும் பகைக் கூட்டம் நம்மைச் சுற்றி! அதிகாரம் ஒரு புறம்; தேசிய ஈட்டிமுனை ஒரு புறம்; வர்ணாஸ்ரம வெடிகுண்டு மற்றோர் புறம்! பார்க்கும் இடமெங்கும் ஆபத்து நமக்கு. இது நமக்குத் தெரியும்—தெரிந்தேதான் களத்தில் குதித்துள்ளோம். எனவே தாக்குதல் எழும்போது நாம் வருந்துவது வீண்வேலை—வரவேற்பதே முறை.

நம் இலட்சியம் பெரிது; அதற்கு நாம் தரவேண்டிய விலையோ அதனினும் பெரிது. பலப்பல "அண்ணாமலை நகர்"களை, எத்தனையோ "கரூர்"களை, மறுபடியும் மறுபடியும் தீக் குளிக்கும் 'மதுரை'களை, மீண்டும் மீண்டும் கண்ணிழக்கும் "சேலங்"களை நாம் கடந்துதான் ஆகவேண்டும். அவை வாரா என்றெண்ணுவது பேதமை. வந்தபின் உள்ளம் உடைவதோ கோழைத்தனம். நம்முடைய இலட்சியங்கள் நியாயமானவையே. ஆனால் நியாயம் என்பதால் மட்டும் அவை வெற்றிபெற மாட்டா. எத்தனையோ "அண்ணாமலை நகர்கள்" எனும் விலை கொடுத்துத்தான் இலட்சிய நிறைவு பெறவேண்டும். எனவேதான் அண்ணாமலை நகர் சேதி கேட்டதும் துள்ளிக் குதித்தோம் நாம், துயர்க் கடல் புகுந்தோமில்லை.

1929-31ம் ஆண்டுகளில் நாம் பெற்ற தழும்புகளே இன்றைய தேவதாசி ஒழிப்பு மசோதாக்கள். அன்று நம்மீது பாய்ந்த அம்புகளே இன்று மணவிலக்குச் சட்டங்கள் எனும் புது உருவம் பூண்டவை. இதோ நாட்டில் நடமாடுகிறதே மறுமலர்ச்சி சகாப்தம், இது அக்காலத்தில் நம்மைத் தாக்கித் தாக்கி ஓய்ந்துபோன கற்கள் எழுப்பிய கட்டிடம். கலை உலகில் புரட்சி என்கிறார்களே இன்று, இது அன்று நம்மீது விழுந்த சாணி உருண்டைகளின் சாயல். தற்பெருமை அல்ல இது, தமிழ்நாட்டு வரலாறு. இந்த வரலாறு தெரிந்தவர்கள் அண்ணாமலை நிகழ்ச்சி கண்டு வருந்தமாட்டார்கள், பெருமகிழ்ச்சியே கொள்வார்கள். ஏன்? இன்றைய தழும்பு நாளைய வெற்றி என்பதுதானே நம் வரலாறு—தன்மான இயக்க வரலாறு தரும் பாடம்!

அண்ணாமலையில் தாக்குண்ட தோழர்களே, அஞ்சாதீர், ஆத்திரம் கொள்ளாதீர், கோபமோ கொந்தளிப்போ அடையாதீர், 'தாக்குதல்' பிரேங்கியை நும்பால் திருப்பியவர் மீது பகைமையோ பொச்சரிப்போ பாராட்டாதீர், இன்று உம்மைத் தாக்கினர், எனினும் நாளை நம் பட்டாளத்துத் தளபதிகள் ஆக இருப்பவர்களே அவர்கள், நம் இனத்தவரே — இனத்தவர் மட்டுமல்ல, சிந்தனைத் திறம் படைத்தவரே, எனவே என்றேனும் ஒரு நாள் நம் அணி வகுப்பில் வரும் பெற்றி அமைந்தவரே அவர்கள்—ஆகவே கொதிப்புற வேண்
கொதிப்பு நம் அணிவகுப்பில்
இருக்கும அவர்களைத் தடுக்கு

திராவிட மாணவ மணி
நீங்கள் சாக்ரடீசை அறிந்
கள், கலிலியோவை உணர்ந்
கள், புருனோவைத் தெரிந்தவர்
டார்வினைப் படித்தவர்கள், அ
களுக்குத் தரப்பட்ட நச்சுக்
பையை — கடுங்காவல் த
னையை — சக்கரத்துச் சித்
தையை—வசைமாரிப் பட
முறை முறையே ஏடுகளில் க
வர்கள், எனவே கவலை வே
டாம், இந்த நிகழ்ச்சி நம் இ
சியத்திற்குரிய விலையில் ஒரு
பகுதியே.

---

## ஏனோ இந்த வீண்
## செலவு

இந்த பாழாய்ப்போன உ
விசித்திரமான பத்திரிகை ஒ
நடமாடுகிறது. அது அச்சா
பிரதிகளோ நூறு! அதனால்
நஷ்டமோ மாதம் ரூபா 1000.
ரிகையின் இலட்சணம் இப்
என்றாலும் அதன் ஆசிரியர் பெ
சம்பளம் மட்டும் மாதம் மு
250 வெள்ளிக் காசுகள்.

ஐயோ பாவம்! எந்தப் பே
இப்படிப் பணத்தை வீண் வி
செய்து நூறு பிரதி அச்ச
ஆயிரம் ரூபா நஷ்டப்படுகி
என்று எண்ணுகிறீர்க
மணிக்கு இருபதாயிரம் மு
யிரம் பிரதிகள் அச்சடி
போட்டியிடும் இக்காலத்தில்
திற்கு நூறு பிரதிகள் வெளி
ஆயிரம் ரூபா நஷ்டப்படும்
தியக்காரன் இவ்வுலகிலே எ
இருக்க மாட்டான். எவ
இருந்தால் அவனைப் பா
உலகம் நகைக்கும். இந்த
திரமான பத்திரிகையை ந
வது ஒரு மனிதனல்ல. ஒரு
கார். எங்கோ உள்ள சா
அல்ல. சென்னை சர்க்கார்!
சென்னையில் நடைபெறும்
தார் சர்க்கார்! நடத்துவதால்
பலன் யாதென்பது சர்க்கா
தெரியாது. பொது மக்
அறியமாட்டார்கள். பொது
ளின் கண்ணுக்கும் கருத்
எட்டாத நுண் பொருளாக

...துவரை இருந்து வந்தது. சென்னை சட்ட சபையில் 25-9-47 தோழர் கோவிந்தசாமி அவர்கள் கேட்ட ஒரு கேள்வியினாலே அது அம்பலத்துக்கு வந்தது. பத்திரிகை அச்சிடப்படுவது ஹிந்துஸ்தானி மொழியில்; அதுவும் உருது தேவநாகரி இரண்டு லிபியிலும்! அதன் ஆசிரியரோ ஒரு வடநாட்டுக்காரர். அவருடைய தகுதியோ திறமையோ சொல்வதற்கியலாத அற்புதம்! செப்பற்றிட்டு அமைச்சர் பக்தவச்சலனார் தந்துள்ள தகவல்கள் இவை. எப்படி இருக்கிறது சென்னை சர்க்காரின் போக்கு. எத்தொழிலைச் செய்தாலும ஏதவத்தைப் பட்டாலும் சென்னை சர்க்காரின் மனம் வட நாட்டைப் பஜனை பண்ணுவதிலேயே இருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் என்ன வேண்டும். வார்தா ஆட்டுவித்தால் இந்த சர்க்கார் ஆடாமலிருக்க முடியுமா? இன்று நடப்பது பொது மக்கள் சர்க்கார். ஆனால் பொது மக்கள் இதுவரை கண்டும் கேட்டும் இராத ஒரு பத்திரிகைக்காக மாதம் ஆயிரம் ரூபாயை அள்ளி இறைக்கிறது சென்னை சர்க்கார். திராவிட மக்கள் அறியாத ஹிந்துஸ்தானி மொழியில், திராவிட மக்களுக்குத் தேவையில்லாத ஒரு பத்திரிகை திராவிட நாட்டு சர்க்காரால் அச்சிடப்படுகிறது. அச்சாகும் பிரதிகளோ நூறு. அது உலவும் இடமோ, அதைப் படிப்போர் தொகையோ, அதனால் விளையும் பயனோ யாரும் அறியாத சிதம்பர இரகசியம்!

பிரதி ஒன்றின் விலை அணா 8; ஆகவே நூறு பிரதிகளும் விலையாகின்றன என்று வைத்துக்கொண்டால் வரும் தொகையோ ரூபா 50. நஷ்டமோ ரூபா 1000. வரவு 50! செலவு 1000! விசித்திரமான பத்திரிகை! விபரீதமான விளையாட்டு!

மாதத்திற்கு 1000; ஆகவே ஆண்டுக்கு 12,000 ரூபா இம்முறையில் வீணாகிறது. இந்த நாட்டில், ஆரம்பப் பள்ளிகள் பல துவக்கலாம், ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமேனும் கொடுத்துதவலாம், கருத் தரித்துள்ள ஏழைத் தாய்மார்கட்கும் பால் வாங்கிக் கொடுக்கலாம், உண்ண உணவின்றி, உணவு தேடும் வழியின்றி, ஊரின் ஒதுக்குப் புறங்களில் செத்த வாழ்வு வாழும் பாட்டாளிகளின் பட்டினிப் பட்டாளத்திற்கு உதவி செய்யலாம், உழவு முறையை விருத்தி செய்யலாம், இல்லையேல் ஆதித் திராவிடர்க்கு நன்மைசெய்யலாம்; அது வேண்டாமெனில் அறிவு வளர்ச்சிக்குச் செலவுசெய்யலாம்; அதுவும் பிடித்த மில்லை—நாஸ்திக பிரசாரம் அது என்பராயின் கல்வி அமைச்சர் தம் கவனத்தை ஈர்த்துவிட்ட 'கலையகராதி' நிதிக்கேனும் சர்க்கார் 12000 ரூபாயைத் தந்திருக்கலாம். இத்தனையையும் செய்யவில்லை சர்க்கார், ஒரு உதவாக்கரை பத்திரிகையை உருவாக்குவதற்குச் செலவாகிறது பன்னீராயிரம். எவர் பெறுவார் நன்மை இதனால்?

ஓமாந்தூர் ஆட்சியே! சற்றே நின் செவி கொடு! அதோ அந்த மாவட்டங்களில் குமுறி எழுகின்ற உழவர் போராட்ட முரசொலிகளுக்குச் செவி கொடு! பஞ்சாலைத் தொழிலாளி நெஞ்சு நொந்து கூவுகின்றான்; அந்தக் கூக்குரலுக்குக் கொஞ்சம் செவி கொடு! இடும்பை கூர் என் வயிறே, உன்னோடு வாழ்தல் அரிது என்று வேதனை விருத்தம் வாசிக்கின்றனர் மக்கள் நாடெங்கும், அந்த வேதனைக் குரலுக்குச் சிறிது செவி கொடு. குதிரைப் பந்தயத்தை ஒழித்தே தீருவோம் என்று பத்திரிகைகள் அத்தனையும் போர் முரசு கொட்டுகின்றன அந்த ஒலியை நின்று கேள். இடம்! இடம்! கல்லூரியில் இடம்! என்று பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக் கதவைத் தட்டுகின்ற மாணவ மணிகளின் பரிதாபச் சிந்து அதோ கேட்கிறது, அதனையும் கேள். செவி கொடு ஆட்சியே, அதோ மற்றொரு மூலையில் சர்க்கார் அலுவலாளர்கள் ஊதியம் இல்லையே, எமக்கு வாழ்வு இல்லையே, நேரடி நடவடிக்கை எடுப்பது தவிர வேறு வழி இல்லையே என்று அடிமூச்சுக் குரலில் பேசுகின்றனர், அதற்கும் செவி கொடு. ஏழையின் குரலுக்கு—பாட்டாளியின் குரலுக்குச் செவி கொடு, ஆனால் "தக்ஷிண ஹிந்த்" போன்ற வீண் விளையாட்டுப் பத்திரிகைகளுக்கு ஆண்டுக்குப் பன்னீராயிரம் செலவழிக்கும் இந்த அர்த்தமற்ற போக்கு மட்டும் வேண்டாம். தங்கள் குறையைத் தீர்க்க வில்லையே சர்க்கார் என்று மக்கள் மனங் கலங்கும்போது "குறைதீர்க்க மனமுண்டு ஆனால் பணமில்லையே எம்மிடம்" என்று தானே நீர் பேசுகிறீர். ஆனால் இதோ வீணுக்கு இறைக்கிறீர் பொருளை, இதை அறிந்தால் அந்த மக்கள் என்ன நினைப்பர்? வெந்த புண்ணில் வேல் பாய்ந்த சேதி இது என்று நினையாரோ? ஏனோ இந்த வீண் செலவு? எவர் மனதை மகிழ்விக்க இவ் விளையாட்டு? திராவிட மக்கள் சார்பில் கூறுகிறோம், இந்தப் போக்கு தவறானது; இது கூடாது என்று. மக்கள் சர்க்கார் என மார்தட்டும் ஓமந்தூர் ஆட்சியின் கண்கள் திறக்குமா?

—

## வருந்துகிறோம்

சென்ற இதழில் வெளிவந்த வேதனைப் புயல் என்னும் சிறு கதையில், சாணான் சிங்காரம் என்றுள்ள சொற்றொடர் சிலர் உள்ளத்தைப் புண்படுத்தியதாக அறிகிறோம். சிறுகதை தீட்டியவர்க்கோ நமக்கோ எந்த ஒரு சமூகத்தையும் தாழ்வாகக் கருதும் எண்ணம் துளியும் இல்லை. சுயமரியாதைக்காரராய நமக்கு அந்த வர்ணாஸ்ரம மனப்போக்கு இருக்கக் கூடுமென்று நினைப்பதே தவறு. என்றாலும், அச் சொல் வழக்கு, தவறான பொருளுக்கு இடம் தருவதாயின், அது குறித்து நாங்கள் மிக வருந்துகிறோம்.

ஆசிரியர்கள்,
"போர்வாள்"

## அறிவிப்பு

1. பெரியார் மலர் கைவசமில்லை.

2. பெரியார் மலர் பிரம்படி தொகையை இன்னும் அனுப்பாத விற்பனையாளர்கள் உடனே அனுப்பித் தரவேண்டும்.

3. சேலம், திருச்சி, செங்கற்பட்டு—மூன்று இடங்கட்கும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

அரசியல் அரங்கம்:

# திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமா?

## கம்யூனிஸ்ட் தோழர் கருத்து.

[தென்னாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளிடையேயும் இன்று அலைமோதுகின்ற பெரும்பிரச்சினை திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமா வேண்டாமா என்பதுதான். வட நாடு தென்னாட்டின்மீது வீசிவிட்ட ஏகாதிபத்திய வலையை அறுத்தெறியவேண்டும் என்கிறது திராவிட கழகம். அப்படி ஒரு வலை கிடையவே கிடையாதே என்று அடித்துப் பேசுகிறது கம்யூனிஸ்ட் கட்சி. இங்கு, கம்யூனிஸ்ட் தோழர் ஒருவர், தான் ஒரு கம்யூனிஸ்ட் என்ற முறையில் ஆனால் சொந்தப் பொறுப்பில், இந்தப் பிரச்சினை பற்றிய தம் கருத்தைத் தருகிறார். அதைத் தொடர்ந்து திராவிடக் கழக நண்பர் ஒருவர் தீட்டிய மறுப்புரையும் உள்ளது. இருவரும் தத்தம் கருத்துக்களைக் கொட்டியுள்ளனர். எதுசரி என்று ஒரு 'நல்ல தீர்ப்பு' கூறுங்கள், இரண்டையும் படித்துவிட்டு.]

### திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமா?

கடந்த சில ஆண்டுகளாக திராவிட இனம், திராவிட நாடு என்ற சொற்கள் தமிழ் நாட்டு அரசியல் உலகில் உலவி வருகின்றன. திராவிடக் கழகமும், அதைச் சேர்ந்தவர்களும், திராவிட நாடு தனி நாடாக வேண்டுமெனப் பிரசாரம் செய்து வருகின்றனர். சில நாட்களுக்கு முன் கடலூரில் திராவிட நாட்டுப் பிரிவினை மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் 20 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. கல்லூரிகளுக்குச் சென்றால், அங்கு பகுத்தறிவாளனும், தமிழனுமான திராவிடக் கழக மாணவன் காரசாரமாக திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமென்று பேசுவதைக் கேட்கலாம்.

இதை எதிர்த்து, திராவிட இனமா? அப்படியொன்றுண்டா? மொழிவாரி மாகாணங்கள் போதாவா? நாட்டைக் கூறு போட்டுப் படும் இன்னல்கள் போதாவா? இனியும் இப்புனித பாரதத்தைக் கூறுபோட வேண்டுமா? என்று கதறுகிறான் தேச பக்தித் தீயிலே புடம் போட்டெடுக்கப்பட்ட தேசபக்தன்.

இவ்விரு கட்சிகளிலும், எதில் உண்மை இருக்கிறது என்று ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

திராவிடக் கழகம் கூறுவதென்ன? "திராவிடம் என்றோர் இனம் உண்டு. தென்னாட்டில் வாழும் தமிழர்கள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடத்தவர்கள் அனைவரும் வாழும் நாடு திராவிட நாடு. இந்நாடும், இனமும் வட நாட்டவரால் சுரண்டப்பட்டு நசுக்கப்பட்டு வந்துள்ளது; வருகிறது. வட நாட்டு ஆதிக்கமும், சுரண்டலும் ஒழியவும், திராவிட இனம் செழிப்புற்று மேம்படவும் திராவிட நாடு தனிபரசா(க) வேண்டும். சமீபத்தில் அரசியல் நிர்ணய சபை, வகுத்துள்ள அரசியல் திட்டத்தைப் பார்த்த பிறகு திராவிட நாடு உடனடித் தேவை என்பது தெளிவாகிறது. இதுதான் திராவிடக் கழகத்தின் கூற்று.

### திராவிடம் ஓர் இனமா?

பண்டைக்காலத்தில், அதாவது ஆரியர்கள் இந்நாட்டுக்கு வருமுன், இங்கு, உயர்ந்த நாகரீகமும், பண்பாடும் கொண்ட மக்கள் வாழ்ந்துவந்தனர். இவர்களை ஆரியர்கள், திராவிடமக்கள் என்று குறிப்பிட்டார்கள். இவர்கள் இந்தியாவுக்குத் தெற்கே இருந்ததாகக் கூறப்படும் லெமூரியா என்ற கண்டத்திலும், பரவியிருந்தார்களாம். வடக்கே மகஞ்ஜதாராவிலும் ஐரோப்பாவிலும்கூட இவர்களுடைய நாகரிகம் பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் நாகரிகத்தில் முன்னேற்

(4-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

## விற்பனையாளர்கள்

எஸ். இராமையா
மெயின் ரோட், **கோயில்பட்டி.**

தாகூர் கம்பெனி
**புதுச்சேரி**

ர. குப்புசாமி
பீடாக்கடை, ஆத்தூர் ரோட்,
**ராசிபுரம்**

ஏ. மீராமொய்தீன்
**வந்தவாசி**

கே. எஸ், ஹமீது
**உத்தமபாளையம்**

பி. சிவப்பிரகாசம்
**உடுமலைப்பேட்டை**

டி. திருஞானம்
நடு வாணியத் தெரு,
**மன்னார்குடி.**

கே. எம். காதர்மொய்தீன்
ஜமால் தெரு, பேகம்பூர்,
**திண்டுக்கல்**

பா. சாமிநாதன்
பென்னிங்டன் ரோட்
ரயிலடி, **தஞ்சாவூர்**

கே. கே. மாரிமுத்து பிள்ளை
**பழனி**

கே. ஆர். இராசகோபால்
**திருப்பத்தூர் (வ. ஆ.)**

எஸ். டி. செல்வம்
செல்விகர் தெரு,
**தூத்துக்குடி**

டி. கே. முனிரத்தினம்
செட்டியார், மளிகை,
**திருக்கழுக்குன்றம்**

எம். தனுஷ்கோடி
கொடைரோடு
**நிலக்கோட்டை**

ஏ. சுப்புசிங்
**நாகர்கோவில்**

ஆர். மாணிக்கம்
ரயிலடி
**கும்பகோணம்**

மு. க. சுந்தரம்
அறிவொளி நிலையம்,
**சிதம்பரம்**

18. எம். பழனியப்பன்
ரதி விலாஸ்,
**திருநெல்வேலி**

19. தூ. செ. கந்தசாமி
விளக்கடி கோயில்தோப்புத் தெரு,
**காஞ்சீபுரம்**

20. ஈ. கே. இராசன்
இரிசன் அறிவு மனை,
**பெங்களூர்**

21. ஜி. ஞான. சாமி,
வைத்தியநாத முதலி தெரு,
**சென்னை.**

22. என். கே. பி. வேல்,
**திருச்செங்கோடு.**

23. நா. உ. அருணாசலம்,
**அருப்புக்கோட்டை**

24. கே. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
92, கச்சேரி வீதி.
**ஈரோடு**

25. கே. ஏ. சங்கையா
தெற்கு வாசல்,
**மதுரை**

26. எஸ். இராமசாமி,
**சேந்தமங்கலம்**

27. திராவிடன் பதிப்பகம்,
**வேலூர் (வ. ஆ.)**

28. பொன்னுகந்தசாமி
இளங்கோ இல்லம்,
**கோபிசெட்டிபாளையம்**

29. டி. தமிழரசு
போலீஸ் லைன் தெரு,
**கரூர்**

30. பி. சதாசிவன்
**வெளிப் பாளையம்**

31. ஜி. இராஜகோபால்
**மாயவரம்**

32. எம். பிச்சை,
குத்துக்கல் தெரு,
**பரமகுடி**

33. டி. எல். நஞ்சப்பன்
அவனாசி ரோடு,
**திருப்பூர்**

34. ஏ. எம். மகமது பாகப்,
**தாராபுரம்**

35. இரங்கநாதன்,
அமுத பிரசராலயம்,
**குளித்தலை**

36. ஏ. கருப்பையா,
பாண்டி ரோடு,
**விழுப்புரம்**

37. வி. ஏ. செல்லசாமி
**சீர்காழி**

38. டி. ஏ. மாணிக்கம்
**திருக்காட்டுப்பள்ளி**

39. டி. எம். வெங்கடாசலம்,
பெரிய தெரு,
**லால்குடி**

40. எஸ். இராமையா,
தெற்குத் தெரு
**திருவாரூர்**

41. கே. கோவிந்தசாமி
ரயிலடி தெரு
**திருத்துறைப் பூண்டி**

42. ஐயம்பெருமாள்,
மேலக் கற்கண்டார் கோட்டை,
**பொன்மலை, திருச்சி.**

43. எஸ். எம். ஸ்ரீராமுலு,
**போளூர் (வ. ஆ.)**

44. ஆர். கிருஷ்ணன்,
தென்கரை,
**பெரியகுளம்**

45. பி நடராசன்
**அறந்தாங்கி**

46. எஸ். கே. எம்.
இராமாநுசம்
**பண்ருட்டி**

47. வி. எஸ். பொன்னுப்
பெருமாள்,
**வாடிப்பட்டி**

48. எம். மாணிக்க முதலியார், வாணியம்பாடி
49. வீரபத்திரன் அரிசிப்பாளையம், சேலம்
50. எம். அருகதாஸ், திண்டிவனம்
51. ஆர். துரைராஜ், ராஜபாளையம்
52. ஏ. எல். சி. பக்தவச்சலு அரக்கோணம்
53. எம். கோமதி நாயகம் தளவாபுரம்
54. ஆர். நாராயணசாமி நாகூர்
55. கலைப் பண்ணை, காரைக்கால்
56. ஆர். சோமசுந்தரம், துறையூர்
57. து. இளங்குப்பன், திராவிடர் கழகம், ஆர்க்காடு
58. கே. ஆர். சாமி. சாவடி, அய்யம்பேட்டை தஞ்சை மாவட்டம்.
59. என். அண்ணாமலை, ஜலகண்டாபுரம்
60. வி. எஸ். குழந்தை, பேராவூரணி
61. எம். எஸ். இராசன், உரிகம் கோலார் தங்கவயல்
62. சூடநாதன், அசூர் சேலம்
63. டி. இராமசாமி நடுவீரப்பட்டு, எட்டயாபுரம்
64. என். எல். வி. முத்தையா, கோனுபட்டு
65. ஆர். அருணாசலம், புதுக்கோட்டை
66. ஏ. கே. மகாலிங்கம் அரகண்ட நல்லூர்
67. என். அருணாசலம் விருதுநகர்
68. வி. டி. தண்டபாணி செட்டி கடலூர் O. T.
69. எம். வி. நாதன் மேட்டுப்பட்டி சின்னாளப்பட்டி P. O.
70. வி. வன்னியன், பனகுடி
71. சி. சிங்காரவேலு திருநாகேச்சுரம் தஞ்சை
72. கே. சண்முகம் பொத்தனூர், சேலம்
73. செ. முத்துராமன், பொன்னமராவதி
74. எம். சண்முகசுந்தரம் கடைத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை.
75. டி. ரத்தினர், ஆடுதுறை
76. எஸ். ஜி. ராமசாமி, வணிகர் தெரு, தக்கோலம்
77. எல். பால சுப்பிரமணியம்' இஞ்சிகுடி தஞ்சை மாவட்டம்
78. எம். பி. இராமலிங்கம், குறிஞ்சிபாடி
79. ஜே. எம். அப்துல் சத்[illegible] ஜோலார் பேட்டை
80. எஸ். துளசி, சித்தூர் ரோ[illegible] குடியாத்தம்
81. திராவிட புக் எம்போரி[illegible] 20, சிளாங் ரோட் சிங்கப்பூர்
82. பாரத் நியூஸ் ஏஜன்சி, 189, கடல் தெரு கொழும்பு, பேட்டை
83. N. நாகப்பா, சிக்கல், தஞ்சை
84. M. பழநியப்பன், திருநெல்வேலி சந்திப்பு
85. N. சீனிவாசன், பாபநாசம், தஞ்சை
86. P. சீனிவாசன், காட்டுமன்னார் கோயில்
87. B. காதர்க்கனி, மேலூர்

## ஏன் வந்தது? எப்படி வந்தது?

சென்னையின் ஒரு பகுதிக்குப் பெயர் சௌகா[illegible] பேட்டை.

தமிழ் நாட்டில் ஓர் ஊரின் பெயர் டால்மியாபுர[illegible]

நாம் தின்னும் பலகாரங்களில் ஒன்று டில்[illegible] பாதுஷா

நாம் உடுக்கும் உடை தயாரான இட[illegible] ஷோலாபூர்.

தேசிய இயக்கத்தின் தலைமை நிலையம் அலக[illegible] பாத்.

நமக்குப் "புண்ய க்ஷேத்திரம்" காசி.

இறந்தாலும் நம் எலும்பு சென்று சேரவேண்டிய ஆறு கங்கை.

நம்முடைய மகாத்மா உறையும் இடம் வார்தா.

எதற்கெடுத்தாலும் வடநாடு என்று சொல்லும் இந்த நிலை ஏன் வந்தது? எப்படி வந்தது?

இன்றும் வடக்கை நம்பும் தோழர்கள் வி[illegible] சொல்லட்டும்.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliy[illegible]